காரணத்திற்காக பிற்பட்டோர் பட்டியலில் சேர்த்துவிட்டால் அரிசன மக்களுக்குள்ள சலுகைகள் கிடைப்பதில்லை. எதிர்காலத்திலாவது அமைச்சரவர்கள் இதுபற்றி பரிசீலிப்பார்களா? அவர்களுக்கு வேறு வகையிலே நிவாரணம் அளிப்பதற்கு சலுகைகள் அளிப்பதற்கு மதம் காரணமாக இல்லாமல் பார்த்துக் கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, பொது இடங்களில் அரிசனாக இருந்தலும், பிற்பட்டவராக இருந்தலும் வேறுபாடு காட்டக் கூடாது; வேறுபாடு காட்டினால் நடவடிக்கை எடுக்க சட்டங்கள் இருக்கின்றன. ஆனால், அரிசனங்களுக்கு என்று கொடுக்கப்பட்டிருக்கிற சலுகைகள் எல்லாம் அவர்கள் இந்து அரிசனங்களாக இருக்கும் வரையில்தான் கிடைக்கும்; கிறிஸ்தவர்களாக மாறிவிட்டால் அந்த சலுகைகள் கிடைக்காது., சலுகைகள் இல்லை என்று திட்டவட்டமாகச் சொல்கிறோம். அரிசன கிறிஸ்தவர் என்று சொன்னால் அவர்கள் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட்டு, அதற்குள்ள சலுகைகளைப் பெற தகுதியுடையவர்கள் ஆவார்கள். மிகவும் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டுமென்றால் அவர்கள் எந்த இடத்திலிருந்து, எந்த இனத்திலிருந்து வந்தவர்களோ அதைப் பொருத்திருக்கிறது. மிகவும் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட்டால் அதற்குரிய சலுகைகளைப் பெற அவர்கள் தகுதி உடையவராவார்கள்.

சிறுசேமிப்புத் திட்டம்

*வினா எண் 262—திரு. ஜே. எஸ். இராசு: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

சிறு சேமிப்பு பற்றி பொதுமக்களுக்கு விளக்கிட அரசு ஏதேனும் தீவிரமான திட்டம் தயாரித்து வருகிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: விவர அறிக்கை சட்டப் பேரவையில் வைக்கப்பட்டுள்ளது.

திரு. ஜே. எஸ். இராசு: தலைவரவர்களே, சிறு சேமிப்பு இயக்கத்தைப் பற்றி பொதுமக்களுக்கு மேலும் விளக்குவதற்காக திரைப்படம் ஒன்று தயாரிக்க திட்டமிடப்பட்டிருப்பதாக நான் அறிகிறேன். ஆம் எனில் கதை, வசனம், பாடல்கள் தயாராகிவிட்டனவா? நடிகர்கள், நடிகைகள் யார், யார்? அந்தப் படம் எப்போது வெளிவரும்?

மாண்புமிகு டாக்டர் இரா நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, ஒரு கருத்தை பொதுமக்களுடைய உள்ளத்தில் ஆழப் பதியவைப்பதற்கு திரைப்படம் சிறந்த சாதனமாகும். கல்வியைப் பொறுத்த வரையில்கூட மேலை நாடுகளில் இந்தத் திரைப்பட முறையை பயன்படுத்துகின்றார்கள். குடும்ப நலம் திட்டம், சிறு சேமிப்புத்

122 ஆம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1982 பிப்ரவரி 19]

திட்டம், பொதுமக்களுக்கு சுகாதாரம் பற்றிய பல்வேறு திட்டங்கள் பொதுமக்களிடத்திலே பரப்பப்படுவதற்கு இந்த விளம்பர சாதனம் தலைசிறந்ததாக இருக்கிறது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற விவரங்கள் தற்போது என்னிடம் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் முழு விவரமும் அளிக்கப்படும்.

திரு ஜே. எஸ். இராசு: தலைவரவர்களே, சிறு சேமிப்புத் திட்டத்தின் துணைத் தலைவராக இருக்கிற மாண்புமிகு சட்ட மன்ற உறுப்பினர் எஸ். எஸ். இராஜேந்திரன் அவர்கள் இந்தத் திட்டத்தை விளக்குவதற்கு திரைப்படம் ஒன்று தயாரிக்க இருக்கிறோம் என்று ஒரு கூட்டத்திலே தெரிவித்து ஆறு மாதங்களுக்கு மேலாகிறது. அதனால்தான் இந்தக் கேள்வியை நான் கேட்டேன்.

அடுத்து, அதைத் தொடர்ந்து நாம் சேர்க்கின்ற அந்த சிறு சேமிப்புக்கு ஈடு கட்டுத் தொகையாகவோ அல்லது மானியமாகவோ மத்திய அரசு எந்த வகையிலே உதவி செய்கின்றது? இந்த ஆண்டு எந்த அளவுக்கு அந்த உதவி நமக்கு கிட்டி இருக்கின்றது என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

(முற்பகல் 9.10)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, சிறுசேமிப்புத் திட்டத்தைப் பொறுத்தவரையிலே மத்திய அரசின் உதவி என்பது இல்லை. பொதுமக்களிடத்திலே சிறு சேமிப்புத் திட்டம் என்ற வகையிலே பணம் திரட்டப்படுகின்றது. அப்படி மொத்தமாகச் சேர்கின்ற அந்த நிதியிலிருந்து மூன்றில் ஒரு பங்கு மத்திய அரசுக்கும், மூன்றில் இரண்டு பங்கு மாநில அரசுக்கும் பயன்படுகின்ற வகையிலே மத்திய அரசு நமக்கு அனுமதி தந்திருக்கின்றது. ஆனால், மத்திய அரசு இதற்கு எந்தவிதமான உதவியும் செய்யவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். வரதராஜன்: தலைவரவர்களே, இந்த சிறு சேமிப்புத் திட்டத்திலே எந்தெந்த துறையினர் பணம் போட்டு வருகிறார்கள் என்று கடந்த ஆண்டுகளிலே அரசு ஆய்வு செய்திருக்கின்றதா? நம்முடைய மக்களின் வாழ்க்கைத்தரம் பின்னோக்கிப் போய்க்கொண்டிருக்கின்ற இந்த நிலைமையிலே பெரிய சேமிப்பிலே போடுகின்றவர்கள்தான் இந்த சிறுசேமிப்பிலும் பணத்தைப் போடுகிறார்கள் என்பது பற்றி அறியப்பட்டிருக்கின்றதா? அதுபற்றி ஆராய்ந்து அதிலுள்ள சில விவரங்களை நாட்டுக்கு அறிவிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, சிறு சேமிப்புத் திட்டத்தினை எல்லா தரப்பிலே உள்ளவர்களும் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்ற முறையிலே அதற்கென்று ஒரு இலாக்காவே ஒதுக்கப்பட்டிருக்கின்றது. இந்த சிறு சேமிப்புத் திட்டத்தை பலரும் பயன்படுத்தி வருகிறார்கள்.

பொதுவாக கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் இதற்கான அலுவலகங்கள் திறக்கப்பட்டிருக்கின்றன. ஆனாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்ற அந்தத் தவறுகள் அவ்வப்போது அறியாது நடந்துகொண்டு வருகின்றது, அதிலே ஏதாவது சிக்கல்கள் ஏற்படுகின்றன என்றாலும், அல்லது அந்த மேம்படுத்துவதற்குரிய வழிவகைகள் இருக்குமேயானாலும் அதைப்பற்றி எல்லாம் ஆராய்ந்து ஆவன செய்யலாம். மத்திய அரசும் ஆராய்ந்து வருகின்றது, மநில அரசும் ஆராய்ந்து வருகின்றது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. செம்மலை. தலைவரவர்களே, மற்ற தேசிய வங்கிகள் தருகின்ற வட்டி விகிதத்தை விடமற்ற கூட்டுறவு வங்கிகள் தருகின்ற வட்டி விகிதத்தைவிட, இந்த சிறுசேமிப்புத் திட்டத்தின் மூலம் அதிகமான வட்டி தரப்பட்டாலும் கூட இதிலே அதிகமான சேமிப்பு இல்லை என்ற நிலைமை இருக்கின்றது. மேலும் அதிலே ஈடுபட்டிருக்கின்ற அலுவலர்கள் அந்த அளவுக்கு ஆர்வம் காட்டாத நிலைமை இருப்பதால், அவர்களுக்கு ஆர்வம் ஏற்படுகின்ற வகையிலே அவர்களுக்கு இன்செண்டிவ் ஏதாவது வழங்கப்படுகின்றதா? அல்லது அந்த முறை அமல்படுத்தப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, சிறு சேமிப்புத் திட்டத்திலே ஆங்காங்கே ஏஜெண்டுகள் என்ற முறையிலே பலர் பணியாற்றி வருகிறார்கள். அவர்களுக்கு ஓரளவுக்கு இன்செண்டிவ் தரப்படுகின்றது. சிறுசேமிப்புக்களைச் சிறந்த முறையிலே சேர்த்துத் தருகின்றவர்களுக்கு அவர்களை ஊக்கப்படுத்துகின்ற அளவுக்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 16 மாவட்டங்களில் எந்த மாவட்டம் சிறந்த முறையிலே அதனுடைய இலக்கையும் நிறைவேற்றி, மேற்கொண்டும் நிதி சேர்த்துத் தருகின்றதோ அதை ஊக்குவிக்க வேண்டும் என்ற முறையிலே ஆண்டுதோறும் ஒரு இலட்சம் ரூபாய்க்கு மேற்பட்ட பரிசினை வழங்கி, மேலும் அந்த மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே சிலபல நல்ல திட்டங்களைத் தீட்டி அதற்கு அந்த நிதியினை செலவழிக்கலாம் என்று கூறிக்கொண்டு வந்திருக்கின்றது.

மண்டபம் பகுதியிலுள்ள புறம்போக்கு நிலம்

*வினா எண் 163 திரு ச. அங்குசாமி: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்டவினாக்களுக்கு விடையளிப்பார —

(அ) மத்திய அரசின் பாதுகாப்பு அமைச்சகம் முகவை மாவட்டத்தில் உள்ள மண்டபம் பகுதியில் இருக்கும் அரசு புறம்போக்கு நிலத்தை தமது உபயோகத்திற்காக தமிழக அரசைக் கேட்டு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், தமிழக அரசு எடுத்த நடவடிக்கை என்ன?